1235

R. No.M. 2445.

REGISTRAR OF BOOKS
9 DEC 1930

உ

சிவமயம்.

வீரசைவம்.

திங்கள் வெளியீடு.

மலர் உ — பிரமோதூத—கார்த்திகை 1930—நவம்பர் — இதழ் கக

க. கடவுள் வணக்கம்
உ. ஸ்ரீபசவேசர் விஜயம்
ங. திருமுருகாற்றுப்படை
ச. வீரசைவ மதமும், வைஷ்ணவ மதமும்
ரு. தீக்ஷையே மோக்ஷ சாதனம்
சு. சிவானுபவம்
எ. வணிகமல்லையர் புராணம்
அ. சிகாதாரண விவகாரம்
கூ. கொலை மறுத்தல்
ய. வடநாட்டு நிகழ்ச்சிகள்

பத்திராசிரியர்: வீ. குமாரவீரையர்,
வீரசைவ நிலையம்,
மூசிரி, (திருச்சி ஜில்லா.)

நித்தியானந்த அச்சுக்கூடம், பெரியகடைவீதி. துறையூர்—1930.

மகாசங்கத்தின் அறிக்கை.

பெரியோர்களே!

நமது மகாசங்கத்தின் ஏழாவது பெருங் கூட்டத் திருவிழாவை, சென்ற மே மாதம் விடுமுறையில் நடத்தக்கருதி நிறைவேற்றற்கழகத்தார் பெரிதும் முயன்றனர். எதிர்பார்த்த தலைவர் வருவதற்கியலாமையால் **1930** டிசம்பர் விடுமுறையில் நடத்தலாமென ஒற்றிவைக்கப் பெற்றது நேயர்கள் அறிந்த விஷயமே. வரும் டிசம்பரில் நடத்துவதற்கு இப்பொழுதும் முயற்சித்து வருகின்றனர். இச்சங்கத்தின் நிறைவேற்றற்கழகத் துறுப்பினரும், உறுப்பினர்களும் பெரும்பாலும் உபாத்தியாயர் முறையிலிருப்பதாலும், விடுமுறையில்லாத காலங்களில் வெளியிற் சென்று காரியங்களைப் பார்க்க இயலாமலிருத்தலாலும், டிசம்பரில் விடும் விடுமுறை நாட்கள் மிகச் சுருங்கி யிருத்தலாலும், மழை மிகுதியால் போக்கு வரவு முதலிய சாதனங்கள் குறைந்திருத்தலாலும் மே மாதம் கோடை விடுமுறையில் நடத்துவதே நலமெனச் சில பொறுப்புடையவர் கூறுகின்றனர். ஆயினும், எதிர்பார்க்கும் முக்கியமான சில காரியங்கள் முடிவு பெறின் இந்த டிசம்பரிலேயே நடத்தலாமெனவும் இன்னும் சில வுரிமையுடையவர் முயற்சி செய்கின்றனர். பல சௌகரியங்களை எதிர் பார்த்து மே மாத விடுமுறையில் நடத்தலாமென நிச்சயமாயினும் பொறுப்பாளர்களும், காரியதரிசிகளும் சந்தா வசூல் செய்தல் முதலிய தமது கடமைகளை இந்த டிசம்பர் விடுமுறையிலேயே முன்னெச்சரிக்கையாகச் செய்து முடிப்பார்களென இக்கழகத்தார் வேண்டிக் கொள்கின்றனர். இறைவன் திருவருள் முன்னின்றுதவுக!

இங்ஙனம்,

தலைமைக்காரியதரிசி.

உ
சிவமயம்.

வீரசைவம்.

பிரமபுரம் ஸ்ரீ சிவஞானபாலைய சுவாமிகள் அருளால்

மகாசங்கத்தினின்றும் வரும்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

9 DEC 1930

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

மலர்	பிரமோதூத — கார்த்திகை.	இதழ்
உ.	1930 — நம்வபர்.	௰க.

(கடவுள் வணக்கம்.)

1 பஞ்சாநந தநுத்பூதாந் பஞ்சாக்ஷர மநூபமாந்
பஞ்சசூத்ர க்ருதோவந்தே பஞ்சாசார்யாந் ஜகத்குரூந்.

2 முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே யீசன் மகனே — யொருகை முகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கா லெப்பொழுதும்
நம்பியே கைதொழுவே னன்.

3 வெள்ள வேணிப் பெருந்தகைக்கி யாஞ்செய் யடிமை மெய்யாகக்
கள்ள வேடம் புனைந்திருந்த கள்வ ரெல்லாங் களங்கமறும்
உள்ள மோடு மெய்யடியா ராக வுள்ளத் துள்ளுமருள்
வள்ள லாதும் வசவேசன் மலர்த்தா டலையால் வணங்குவாம்.

4 பங்க வளற்று வழிமாற்றி யொருநல் வழியைப் பகர்வார்போல்
தங்கண் மதியிற் பலபிதற்றுஞ் சமய நரைக டமைநீக்கி
அங்க நிலையிற் றிலிங்கநிலை யிற்றென் றருளும் வீரசைவ
சிங்க நிலைத்த வருட்சென்ன வசவன் றிருத்தாள் சிரத்தணிவாம்.

5 மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி
இறைவர்தம் பெயரை நாட்டி யிலக்கணஞ் செய்யப் பெற்றே
அறைகடல் வரைப்பிற் பாடை யனைத்தும்வென் றரியத்தோடு
உறழ்தரு தமிழ்த்தெய் வத்தை யுண்ணினைந் தேத்தல் செய்வாம்.

ஸ்ரீ பசவேசர் விஜயம்.

திருவாளர், G. C. வீரப்பா B. A., L. L. B. அவர்கள்.

உபதேசம்.

உண்மையன்பர்களே !

கடவுள் உலகத்திலுள்ள உயிர்கள் அனைத்தையும் படைத்துக் காக்கும் பெருஞ் செல்வராய் இருத்தலின், நாம் ஒரு பொருளைக் கொடுத்து அவரை மகிழ்விக்கும் கொடையாளி ஆகவும் மாட்டோம்; அவரும் நம்மிடத்து ஒன்றைப்பெற விருப்பம் உடையவரும் ஆகார். அவர் எங்கும் நிறைந்தவராயும் முற்றும் உணர்பவராயும் இருத்தலின், குறிப்பிட்ட ஓரிடத்திலோ ஓர் காலத்திலோ அவர் மகிழ்விப்பதாகக் கருதி வழிபாட்டினையோ, தியானத்தையோ, போற்றுதலையோ செய்து ஏனைய இடங்களிலும் காலங்களிலும் அவரை மறந்திருத்தல் அறிவுடைமையாகாது. அதனால் அவர் மகிழவுமாட்டார். எவ்விடத்தும் எக்காலத்தும் அவரைச் சிந்தித்தல் வேண்டும். நாம் அடிமை, அவர் தலைவர் என்றெண்ணி அவர் மகிழும்படி பொய்யுரைக்காமலும் புலால் உண்ணாமலும், களவு செய்யாமலும், கற்பழிக்காமலும் உலக நன்மைக்கான உபகாரங்களைச் செய்தல் வேண்டும். காணப்படும் உருவப் பொருள்களும், காணப்படாத அருபப் பொருள்களும் அவருடையனவே. நம்முடைய உயிரும் அவருடையதே. உடலும் அவருடையதே. நமது அறிவு ஒன்றை யுணர்தலும் அவரது அருளாலேயாம். உணராது மயங்குதலும் அவரருள் இன்மையாலேயாம். அவர் விதித்த நற்காரியத்தை இடைவிடாது செய்துவந்தால் அவரது அருளுண்டாகும். அவரை ஒரு கணமேனும் மறந்தால் ஒன்றும் நன்மையாக நடைபெறாது.

அக்கடவுளது தன்மை இப்படியிருக்க பார்ப்பவர் மகிழும்படி ஓர் காலத்தில் பூஜை செய்வதாக ஆடம்பரமாகப் பெரும்பொருள் செலவழித்து அபிஷேக ஆராதனைகள் செய்து நவரத்தின மாலைகளால் அலங்கரித்துத் திருவிழா நடத்துவதனால் அவர் மகிழவுமாட்டார். உண்மையாக உள்ளும் புறமும் ஒத்துத் தூய்மையான மனத்துடன் சிந்தித்தல் வேண்டும். சிலர் அன்ன தானஞ் செய்வதாக

வெளிக்காட்டிப் பலரிடத்தும் வற்புறுத்திப் பொருளை வாங்கி அதிற் பெரும் பகுதியைத் தமது குடும்பத்தின் பாதுகாப்பிற்காக வைத்துக் கொண்டு ஓர் சிறு பகுதியைக் கொண்டு ஆடம்பரத்துடன் அன்ன தானஞ் செய்கின்றனர். அதனை உண்பவரும் பெரும்பாலும் அவரது சுற்றத்தாரும் செல்வமுடையாருமாகக் காணப்படுகின்றனர். ஏழைகளுக்கு உணவு கிடைப்பதோ அரிது. இப்படிச் செய்யும் அன்ன தானத்தால் யாதொரு பயனுமில்லை; உலகத்தில் இவர் ஆன்றோரால் பழிக்கவும் படுவர், பாபத்தையும் அடைவர். மனிதரால் புகழப்பட வேண்டுமென்று செய்வது நற்காரியமாயினும் அது அவ்வளவு பெரும் பயனைத் தராது. இவை யெல்லாம் உண்மையான கடவுள் பூஜையும் அன்னதானமுமாகா. அப்படியானால் உண்மையான கடவுள் பூஜை தான் யாது? என்னின், தம்மால் நீக்கமுடியாத துன்பத்தில் அகப் பட்டுக்கொண்டு வருந்தும் ஏழைமக்களைக் கண்டு இவரெல்லாம் கட ளுடைய குழந்தைகள் அல்லவா! இவர் வருந்த நாம் உண்டுடுத்தி வாழலாமா? என்று மனமிரங்கி அவரை அத்துன்பத்தி னின்றும் விடுவித்து வேண்டும் உபகாரங்களைச் செய்தலும், தீயவழியிற் செல் வோரை இதோபதேசஞ் செய்து நல்வழியில் திருப்புதலும், பெரும் பாலும் உலகம் நடை பெறுதற்கான உபகாரங்களைச் செய்தலுமே உண்மையான கடவுட் பூஜையாகும்.

செல்வத்தின் நிலைமை :—

செல்வச் சீமான்களே! நீங்கள் முற்பிறப்பிற் செய்த புண்ணியத் தால் இப்பொழுது செல்வவான்களாக இருக்கின்றீர்கள். அப்புண்ணி யத்தைச் செய்யாதவர்கள் வறுமையில் வருந்துகின்றனர். செல்வத்துக் குக்காரணம் நல்வினையே. வறுமைக்குக் காரணம் அது செய்யாமையே, ஒருவரால் செய்யப்படும் புண்ணியமும் பாபமும் ஓரளவாய் என்றுங் குறையாமல் இருப்பனவல்ல. புண்ணியப் பயன் உள்ள வரையும் செல்வம் நிறைந்து நிற்கும். அது குறையவே செல்வமும் குறையும். பாபம் உள்ள வரையும் வறுமைத் துன்பம் பிடித்து வருத்தும். அது நீங்கும்பொழுது அத்துன்பமும் நீங்கும். அதனாற்றான் 'செல்வம் சகடக்காற் போல வரும்' எனவும், செல்வம் என்னும் அப்பெயர் 'சென்றுகொண்டிருப்போம்' என்னும் பொருளில் தன்மைப் பன்மை வினையாலணையும் பெயராகப் பொருள்கட் கெல்லாம் அமைந்துள்ள

தெனவும், தரித்திரமும் நிலைப்பட்டு உள்ளதன்று; அதனாற்றான் அச்சொல் ‘ஓரிடத்தில் என்றும் நிலைப்பட்டுத் தரித்திருக்க மாட்டோம்’ என்னும் பொருளில் அமைந்து தனதியற்கையை உலகினர்க்கு எடுத்துக் காட்டுகின்றதென்றும் அறிவுடையார் அறிந்து கூறுகின்றனர். ஆதலால் செல்வமும் வறுமையும் ஓரிடத்தில் நிலைத்திருப்பனவல்ல. செல்வவானாய் இருக்கும்பொழுது பிறரை மதியாது தன் மதிப்புச் செய்து கொள்ளுதலும், வறுமையாளனாய் இருக்கும்பொழுது பிறர் இடஞ்சென்று தன் மதிப்பைக் குறைத்துக்கொள்ளுதலும் கூடாத காரியமாம். “பெருக்கத்தும் வேண்டும் பெரும் பணிவு மிகச் சிறிய சுருக்கத்தும் வேண்டு முயர்வு” என்கின்றனர் பொய்யில் புலவரும். அஃதாவது ஒருவன் பொருள் முதலியவற்றால் பெருக்கம் அடைந்திருக்கும் நற்காலத்திலும் தன்னையும் பொருளையும் நிலையாகக் கருதித் தன்பால் வரும் ஏழைகளையும் அறிவுடையாரையுங் கண்டு மதியாது செருக்குற்றிருக்காது அவரினும் அவர்பால் மிகப் பணிவுடையவனாய் வரவேற்று உபசரித்தல் வேண்டுமென்பதும், ஒருவர் பொருட்செல்வத்தான் மாத்திரம் சுருங்கியிருக்கின்ற காலத்தும் தமது குடிப்பிறப்பு ஒழுக்க முதலியவற்றின் உயர்வை மறந்து பொருள் பெற வேண்டிக் கயவர்பாற் சென்று தம் மதிப்பைக் கெடுத்துத் தாழ்ந்து நிற்காது இரவாமையாகிய உயர்வுடையராக இருத்தல் வேண்டுமென்பதும் அப்புலவர் பெருமான் நமக்கு அறிவுறுத்திய உறுதிமொழியாம். ஆனால் நீங்கள் செல்வத்தை வெறுத்ததாகக் கருதலாகாது. செல்வப் பொருள் இல்லையேல் இவ்வுலகியல் காரியம் ஒன்றும் நடைபெறாது. தன் குடும்பத்தை நடத்திக்கொள்ள வேண்டுமென்றாலும் பொருள் வேண்டும். ஏழை மக்களுக்கிரங்கி உதவிபுரிய வேண்டும் என்றாலும் பொருள் வேண்டும். மறுமைக்கு உதவியாகப் புண்ணியத்தைத் தேடவேண்டும் என்றாலும் பொருள் வேண்டும். ஆதலால் ஒவ்வொருவரும் முயற்சியின்றி வீணர்களுடன் கூடி முன்னோர் தேடிய பொருளை அழித்துவிடாது மீண்டும் மீண்டும் கைத் தொழிலையோ அல்லது வாணிபத்தையோ, பயிர்த் தொழிலையோ செய்து நன்னெறியில் பெருக்கம் உடையராதல் வேண்டும். பொருட்பெருக்கம் உடையராயின் தன் மரபினரையும் ஏழையையும் காத்தல் வேண்டும். ஒருவர் முயற்சியுடையராய் ஒரு தொழின் முறையைச்செய்வாராயின் அவரையடுத்த பலரும் நல்வாழ்வை யடைதல் கூடும்.

சிலர் முன்னோர் தேடி வைத்திருந்த பொருளையோ தாம் வருந்தித் தேடிய பொருளையோ வழியறியாது வீணில் செலவழிக்கின்றனர். தருமஞ் செய்து புகழ்பெற வேண்டுமெனக் கருதித் தமது நிலையையும் பொருள் வருவாயின் அளவையும் அறியாது மனம் வந்தவாறெல்லாம் புகழ் என்னும் பேய் வாய்ப்பட்டு மயங்கித் தம் பெரும் பொருளை யெல்லாம் செலவழித்து விட்டுக் கடன் கொடுத்தார்க்கும் பதில் சொல்ல வழியறியாதவராகி வருந்தி நிற்கின்றனர். சிலர் மதுபான முதலிய பெருங் குடியாளாகி மிடாக் குடியாளரோடு பழகி உள்நாட்டு மதுவோ டொழியாது அயல்நாட்டு வெறிச் சாற்றினையும் உண்டு வீணர்களாய்ப் பெரும்பொருளை யழித்துவிடுவதும் அல்லாமல் இதயம் வெடிக்க எடுப்பாருமின்றி இறந்தொழிகின்றனர். அந்தோ! மதுபானம் மிகக் கொடிது! மிகக் கொடிது!! அம்மதுபானமோ வறுமை நோயை எதிர்கொண்டு அழைக்கும் விருதுகளில் முக்கியமானது; திருமகளை வீட்டிற்குள் நுழைய வொட்டாது வெருட்டும் வேட்டை நாய்; சகல சாதனங்களுக்கும் காரணமான தேகாரோக்கியத்தைக் கெடுக்கும் தீப்பிணி; இம்மட்டிலுமா? அம்மதுபானஞ் செய்வோர் அறிவாற்றல்களை யிழந்து, தமது அழகினைக் கெடுத்து, மானத்தையுங் கெடுத்து, மரபிற்கும் இழிவைத் தேடி, அறிவுடையாரைக் காணவுமஞ்சி, மதிமயங்கி, அயலார் பரிகசிக்கப் பரிதபிக்கின்றனர். இம்மதுபானம் தன்னோடு ஒழியாது களவு, பொய்யுரைத்தல், வியபிசாரம் முதலிய சகோதரர்களையும் தன்னுடன் சேர்த்துக்கொள்ளும். ஆதலால் பொருளுடையவர்கள் தம் பொருளை இம்மதுபானம் போன்ற தீயவழிகளிற் செலவழித்துக் கெட்டொழியாது பொருள் உள்ளபொழுதே உலகத்திற்கு உபகாரமாக நல்வழியிற் செலவுசெய்து புகழும் புண்ணியமும் உடையராதல் வேண்டும்.

(தொடரும்).

திருமுருகாற்றுப்படை.

உ.—திருச்சீரலைவாய்.

(முன் தொடர்ச்சி).

எஅ. வைந்நுதி பொருத வடுவாழ் வரிநுதல்
வாடா மாலை யோடையோடு துயல்வரப்

அ0. படுமணி யிரட்டு மருங்கிற் கடுநடைக்
கூற்றத் தன்ன மாற்றரு மொய்ம்பிற்
கால்கிளர்ந் தன்ன வேழ மேல்கொண்(டு)

பதவுரை.—வை நுதி – கூர்மையையுடைத்தாகிய நுதியையுடைய அங்குசத்தினுல், பொருத – வெட்டப்பட்ட, வடுஆழ் – தழும்பு அழுந்தின, வரி – புள்ளிகளையுடைய, நுதல் – மத்தகத்திலே, வாடாமாலை – பொன்னரிமாலை, ஓடையொடு – முக பட்டத்துடன் கிடந்து, துயல் வர – அசைய, படு மணி – தாழ்கின்ற மணி, இரட்டும் – மாறியொலிக்கும், மருங்கின் – பக்கத்தினையும், கடு நடை – கடிய நடையினையும், கூற்றத்து அன்ன – கூற்றுவனை யொத்த, மாற்றரும் – பிறரால் தடுத்தற்கரிய, மொய்ம்பின் – வலியினையுமுடைய, கால் கிளர்ந்தது அன்ன – (ஓடுங்கால்) காற்றெழுந்தா லொத்த, வேழமேல் கொண்டு – யானையின் மேலேறி.

பொழிப்புரை.—(அச்செவ்வேல் முருகன்) தாழ்கின்ற மணிகள் காலைப் பெயர்க்குந் தோறும் மாறி யொலிக்கும் பக்கத்தினையும், கடிய நடையினையும், கூற்றுவனை யொத்த பிறரால் தடுத்தற்கரிய வலியினையு முடைய ஓடுங்கால் காற்றெழுந்தா லொத்த யானையின் மேல், கூர்மையை யுடைத்தாகிய நுதியையுடைய அங்குசத்தினுல் வெட்டப் பட்ட தழும்பு அழுந்தின புள்ளிகளையுடைய அந்த யானையினது மத்தகத்தில் பொன்னரிமாலை முகபட்டத்துடன் கிடந்து அசையா நிற்க ஏறி.

இதனுல் முருகப்பெருமானது யானையினது இயற்கைத் தன்மையும், முகபட்ட முதலிய செயற்கை யழகும் இத்தன்மையன வென

விளக்கியவாறும். வைந்நுதி – சினையாகு பெயராய் அதனையுடைய அங்குசத்திற்காயிற்று. வாடாமாலை எனவே பொன்னரிமாலை எனப்பட்டது. 'மருங்கு முதலியவற்றையுடைய வேழத்தின்கண் நுதலில் பட்டத்துடன் மாலையசைய ஏறி,' என இயற்கையும் செயற்கையுந் தோன்றப் பிரித்துக் கூட்டிப் பொழிப்புரைக்கப்பட்டது.

௮௩. ஐவே றுருவிற் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
௮௫. மின்னுற ழிமைப்பிற் சென்னிப் பொற்ப
நகைதாழ்பு துயல்வருஉம் வகையமை பொலங்குழை
சேண்விளங் கியற்கை வாண்மதி கவைஇ
யகலா மீனி னவிர்வன விமைப்பத்
தாவில் கொள்கைத் தந்தொழின் முடிமார்
௯௦. மனனேர் பெழுதரு வாணிற முகனே.

பதவுரை.—ஐவேறு உருவின் – ஐந்தாகிய வேறுபட்ட வடிவினையுடைய, செய்வினை முற்றிய – (முடிக்குச்) செய்யுந் தொழிலெல்லாம் முற்றுப்பெற்ற, முடியொடு விளங்கிய – முடியோடே கூடி விளங்கிய, முரண்மிகு – ஒன்றற்கொன்று மாறுபாடு மிகும், திருமணி – அழகினையுடைய மணி, மின் உறழ் – மின்னலொடு மாறுபடுகின்ற, இமைப்பின் – விளக்கத்தோடே, சென்னிப் பொற்ப – தலையிலே பொலிவு பெற; நகை தாழ்பு – ஒளிதங்கி, துயல் வருஉம் – அசையும், வகை அமை – தொழிற் பாகுபாடு அமைந்த, பொலங்குழை – பொன்னாற் செய்த மகரகுண்டலம், சேண் – சேய்மை நிலத்தே சென்று, விளங்கு இயற்கை – விளங்கும் இயல்பினையுடைய, வாண் மதி – ஒளியையுடைய சந்திரனை, கவைஇ – சூழ்ந்து, அகலா மீனின் – நீங்காத உரோகணி முதலிய நக்ஷத்திரங்களைப் போல, அவிர்வன இமைப்ப – விளங்குவனவாய் ஒளியைக் கால, தா இல் – வருத்தமில்லாத, கொள்கை – விரதங்களையுடைய, தம் தொழில் – தமது தவத்தொழிலை, முடிமார் – முடிப்பாருடைய, மனன் நேர்பு – மனத்திலே பொருந்தி, எழுதரு – தோன்றுகின்ற, வாள் நிறம் – ஒளி பொருந்திய நிறத்தையுடைய, முகன் – முகங்களிலே.

பொழிப்புரை.—(முருகப் பெருமான் யானையின் மேலேறி) ஐந்தாகிய வேறுபட்ட வடிவினையுடைய முடிக்குச் செய்யுந் தொழிலெல்லாம் முற்றுப்பெற்ற முடியோடு கூடிவிளங்கிய ஒன்றற்கொன்று மாறுபாடு மிகும் அழகினையுடைய மணி, மின்னலோடு மாறுபடுகின்ற விளக்கத்தோடே தலையின்கண் பொலிவுபெற; ஒளிதங்கி அசையும் தொழிற் பாகுபாடு அமைந்த பொன்னாற் செய்த மகரகுண்டலம், சேய்மை நிலத்தே சென்று விளங்கும் இயல்பினையுடைய ஒளியையுடைய சந்திரனைச் சூழ்ந்து நீங்காத உரோகணி முதலிய நக்ஷத்திரங்களைப் போல விளங்குவனவாய் ஒளியைக் கால; வருத்தமில்லாத விரதங்களையுடைய தமது தவத்தொழிலை முடிக்குந் தவசிகளுடைய மனத்திலே பொருந்தித் தோன்றுகின்ற ஒளி பொருந்திய நிறத்தையுடைய முகங்களில்.

சென்னியின்கண் திருமணி பொலிவு பெற, மதியை யடுத்த உரோகணி முதலியன போல இருமருங்கும் பொலங்குழை ஒளியைக் கால, தவமுடிக்கும் ஆற்றல் உடையாரது மனத்தின்கண் எழுந்து தோன்றும் முகங்கள் என வினைமுடிவு செய்க.

தலையின்கண் சூடப்பெறும் முடி ஐவகை வேறுபட்ட வடிவினையுடையதை ஐவேறுருவின் என்றார். "தாமமுகுடம் பதுமங் கிம்புரி, கோடக மிவை முடிக் கைவே றுருவே" என்பது. தொல் – எழுத் – உயிர் மயங்கியல் ௫௬.

இதனால், முருகப் பெருமானது மகர குண்டலங்கள் அணிந்த திருமுக மண்டலங்களாறும், என்றும் நீங்காது அணிமையிலிருக்கும் உரோகணி முதலிய உடுக்களைப் பக்கத்தே யுடையனவாய் சேய்மைக் கண்ணின்றே தண்ணொளி பரப்புந் தன்மையை யுடையனவாய் விளங்கும் சந்திரர்களை யொப்பத் தண்ணருள் புரியுந் தன்மையை யுடையன வென்றும், அங்ஙனந் தண்ணருள் புரிவதும் குற்றமற்ற விரதத்தைக் காக்குந் தவத்தை முடிக்கும் ஆற்றலையுடைய முனிவரது தூய்மையான மனத்தின்கண் தோன்றி யென்பதும் பிறவும் பெற்றாம்.

இன்னும், 'அகலா மீனின்' என்பதற்கு உரோகணி முதலிய உடுக்கணம் போல் என்பதன்றி திங்களை யடுத்து அணிமைத்தாய் விளங்கும் வியாழனும் சுக்கிரனும் போல எனினும் பொருந்தும் என்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர்.

வீரசைவமதமும் ஸ்ரீவைஷ்ணவமதமும்.

(திருப்பதி வேங்கட்டரமணர்).

ஆஸ்தான வித்துவான், சிரசி. குருசாந்த சாஸ்திரிகள், மைசூர்.

முன் இதழில் இவ்விரண்டு மதங்களுக்கும் இருக்கத் தக்க ஒற்றுமை வேற்றுமைகளையும், காலவளவையையும் பற்பல உதாரணங்களினுல் விளக்கியுள்ளதை வாசக நேயர்கள் தொடர்பாகப் படித்து இரண்டிற்குமுள்ள உண்மைத் தன்மையை யறிந்து இன்புற்றிருப்பார்கள். இராமாநுஜாசாரியர் தமிழ் நாட்டின்கண் பரம்பூதூர் என்னும் கிராமத்தில் ஆசூரி கேசவ சோமயாஜி யென்பவர்க்குப் புதல்வராக அவதரித்தனர். இவர் யாதவப் பிரகாசரது மாணுக்கராகி அவரிடத்தில் வேதாந்த சாஸ்திரங்களைப் பயின்று பெரும்புலவராகி உலகத்தில் விஷ்ணு பக்தியைச் சிறப்பாக நிலைநாட்டத் தொடங்கினர். இராமாநுஜாசாரியரது தோற்றத்திற்கு முன்னர்த் தமிழ் நாடெங்கும் சிவபக்தியே விளங்கியிருந்தது. இவர் பூதபிசாசங்களால் பீடிக்கப்பட்டிருந்த சில அரசர்களுடைய புதல்வியர்களை அந்நோயி னின்றும் நீக்குவித்துக் குணப்படுத்தியதனுல் அந்தந்த அரசர்கள் இவர்க்குச் சீடர்களாகி இவருடைய கருத்தின்படி ஸ்ரீ வைஷ்ணவ மதத்தை அங்கீகரித்தனர் என்று இவரது ஜீவிய சரித்திரத்தால் அறியக் கிடக்கின்றது. சில அரசர்கள் ஸ்ரீ வைஷ்ணவ மதத்தை அங்கீகரிக்கவே இராமாநுஜாசாரியார் அந்த அரசர்களுடைய சகாயத்தினுலும் தமது அறிவின் திறத்தாலும் பற்பல வழியாக விஷ்ணு பக்தியைப் பரப்புதற்காகத் தமது மதத்தை விசேடமாகப் புனைந்துரைக்கத் தொடங்கினர். அக்காலத்தில் கணக்கற்றவர்கள் ஸ்ரீ வைஷ்ணவ மதத்தை மேற்கொண்டார்கள். சிவபக்தி மயமாயிருந்த தமிழ் நாட்டில் வைஷ்ணவ மதம் பரவலாயிற்று. பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டின்கண் சிவபக்தியில் தலைமை பெற்றவராகிய வீரசைவர்கள் விசேடமாக வசித்து வந்தார்களென்றும், இராமாநுஜாசாரியருடைய ஆட்சியினுல் வீரசைவர்களுடைய தொகை குறைந்துவர வீரசைவத்தின் பெருமை குறைந்து வந்ததென்றும் தெரியவருகின்றது.

இராமாநுஜாசாரியார் அரசர்களுடைய சகாயத்தினுலோ, வேறு காரணங்களாலோ மிகவும் புகழ்பெற்று விளங்கிய சில சிவசம்பந்தமான தேவாலயங்களைத் தமது சுவாதீனப் படுத்திக்கொண்டு அந்த தேவாலயங்களில் விஷ்ணு விக்கிரகங்களைத் தாபித்தனரென்றும், சில

சைவ விக்கிரகங்களையே விஷ்ணு விக்கிரகங்களாகச் செய்தனரென் றும் நூலாதாரங்களினாலும் பிரத்தியக்ஷ அனுபவங்களினாலும் தெரிய வருகின்றது. இவ்விஷயத்தில் திருப்பதியில் இருக்கும் வெங்கடரமண சுவாமியினுடைய தேவஸ்தானமே பலமான சாக்ஷியாகின்றது. அந்த வெங்கடரமணரது விக்கிரகமே விஷ்ணு விக்கிரகமல்ல வென்றும், அந்த விக்கிரகம் வீரபத்திரசுவாமி விக்கிரகமென்றும், வீரபத்திரசுவாமி விக்கிரகத்தையே இராமாநுஜாசாரியார் விஷ்ணு விக்கிரகமாகச் செய் தனரேன்றும் ஸ்ரீபதிபண்டிதர் தாமெழுதிய ஸ்ரீகரபாஷியத்தில் விளக்க மாக எழுதியுள்ளார்கள். அந்த பாஷியத்தின் வசனங்களையே இதன் கீழ் குறிப்பிடுகின்றேம்.

"நநு வேங்கடேஸ்வர விடலேஸ்வரஸ்தானே விஷ்ணேரீஸ்வர சப்த ஸ்ரவணாத், பரசுராமாதாரே தஸ்ய ப்ராஹ்மண குல சம்பவ ஸ்வ ணாத் கதம் க்ஷத்ரியத்வமுப திஸ்யதே இதிச்சீந்ந, வேங்கடேஸ்வரஸ்யா பாஸ விஷ்ணுத்வம், த தங்கே நாகபூஷணாதி தர்மாணாம் த்யோதநாத், மூலவிக்ரஹே சங்க சக்ராதி லாஞ்சநா நாமதர்ஸநாத், வீரேஸ்வரஸ்ய ராமாநுஜ கல்பித வேங்கடேஸ்வரத்வம் ரஜ்ஜௌ ஸர்ப்பவதா பாஸ மாத்ரமேவ".

இந்த பாஷியவசன வரிசைகளை ஆராய்ந்து பார்த்தால் திருப்பதி க்ஷேத்திரத்தில் இருக்கும் மூர்த்தி வீரபத்திரமூர்த்தி யென்றும், இப் பொழுதும் அந்த மூர்த்திக்கு விஷ்ணுவின் முக்கிய அடையாளங்களா கும் சங்கு சக்ராதிகள் இல்லையென்றும், அந்த மூர்த்தி சர்ப்பாபரண பூஷிதமாக இருக்கிறதென்றும் காணப் பெறுகின்றது. இந்த பாஷி யக் கருத்தாவின் வாக்கியங்கள் சத்தியமோ அல்லது அசத்தியமோ வென்று விசாரிப்பது எல்லோருடைய முக்கிய கடமையாகின்றது. திருப்பதி ஆலயத்தைப் பார்த்து வந்த பலரை விசாரித்ததிலிருந்து அங்கிருக்கும் ஸ்ரீ வெங்கடரமண சுவாமிக்குக் கண்டத்தில் சர்ப்பம் சுற்றிக் கொண்டிருப்பது உண்மை யென்றும், கைகளில் சிலையினாற் செய்த சங்க சக்ரங்கள் இல்லாமல் உலோகத்தினாற் செய்த சங்க சக்ரங் களை வைத்திருக்கின்றனர் என்றும் கூறுகின்றனர். இதனால் ஸ்ரீபதி பண்டிதர் அந்த விக்கிரகத்தின் உருவம் அனைத்தையும் நன்றாக நேரிற் பார்த்தறிந்தே தமது பாஷியத்தில் உண்மையான விஷயத்தை எழுதி யிருக்கின்றாரென்று ஐயமற விளங்குகின்றது. உலகத்தில் பல விஷ்ணு

மூர்த்திகள் இருக்கின்றன. எந்த விஷ்ணு மூர்த்தியாகட்டும் சர்ப்ப ஆபரண சம்பந்தமுடையதாயும், சங்கு சக்ரமில்லாததாயும் காண்பது அரிது. ஆனால் வெங்கடரமணருக்கு சர்ப்பாபரணம் இருப்பதாலும் சங்க சக்ரங்கள் இல்லாமல் இருத்தலாலும் அந்த மூர்த்தியை வீர பத்திர மூர்த்தியென்றே கூற வேண்டியதாகின்றது. நடவடிக்கையில் இருக்கும் வெங்கடரமண மூர்த்திக்கு இப்பொழுதும் சில இலிங்கா யதர்கள் குலதெய்வமென்று பக்தியினால் பிரார்த்தனை செலுத்துகின் றனர். வீரசைவர்கள் விஷ்ணு மூர்த்தியை வீட்டுத் தெய்வமாக எங் கும் எப்பொழுதும் பாராட்டிக் கொள்வதில்லை. இந்த மூர்த்தி பூருவ காலத்தில் வீரபத்திர மூர்த்தியாக இருந்ததனாலும், அந்த மூர்த்தியே சிலருக்கு குலதெய்வமாக இருந்ததனாலும் வீரபத்திரதேவர் என்ற பெயர் இல்லாமற்போக வெங்கடரமணர் என்ற புதிய பெயர் வந்து விஷ்ணுமூர்த்தியின் அடையாளங்களைப் பெற்றிருந்தாலுங்கூட அந்த மூர்த்தியினிடத்தில் தமது பக்தியை விடாமல் இதுவரை நடத்திவரு கின்றனர் என விளங்குகின்றது.

இதே மாதிரியாக, இராமாநுஜாசாரியர் காலத்தில் ஜனங்கள் அபிப்பிராயப்படுவது போல பற்பல வித்தியாசங்கள் உண்டாயிருக்க வேண்டுமென ஊகிக்கவேண்டி வருகின்றது. பூருவ காலத்தில் திரா விடதேசம் (தமிழ்நாடு) வீரசைவர்களுடைய சொந்த மனையாக இருந்து வந்தது. அந்த தேசத்தில் பல வாக்கிற் சிறந்த பண்டிதர்கள் பிறந்து வீரசைவ மதவிஷயத்தில் பற்பல சிறந்தநூல்களை எழுதியிருக்கின்றனர். வீரசைவ மயமாயிருந்த தமிழ் நாட்டின்கண் இப்பொழுது எங்கேயோ ஒவ்வொரு வீரசைவர்கள் இலைமறை காய்போல வசித்துக்கொண்டு இருப்பதைப் பார்த்தால் மிகுந்த வருத்தத்தைத் தருகின்றது! பரதக் கண்டத்தில் எத்திசையினும் வியாபித்திருந்த வீரசைவமானது சிற் சில அரசர் காலத்திலும், அன்னிய மதாசாரியர் காலத்திலும் இப் படியே இடுக்கணில் அகப்பட்டுக் குறைந்த நிலையை அடைந்து வந் திருக்கின்றது. பரமாத்மாவாகிய பசுபதி இந்த மதத்திற்குப் பூருவ காலத்தைப் போலவே சகல வைபவங்களையும் கொடுத்து இந்த மதத்தை எத்திசையின்கண்ணும் பிரகாசப்படும்படிச் செய்வித்தருள வேண்டுமென அந்த உலக வியாபியாகிய உமாசகிதனையே வேண்டு கின்றேன்.

தீக்ஷையே மோக்ஷ சாதனம்.

ஜ ப ல க்ஷ ண ம்.

ஆசாரியர் முகமாகச் சிவாகம விதிப்படி தீக்ஷை செய்துகொண்ட வீரசைவர்களும் பிறரும் தமது ஆசாரியரால் உபதேசிக்கப் பெற்ற ஸ்ரீ பஞ்சாக்ஷர மந்திரத்தைச் ஜபித்து சிவானுக்கிரகத்தைப் பெற வேண்டியதும் முக்கியமாதலின் ஜபலக்ஷணம் இதன்கண் விவரிக்கப் பெறுகின்றது.

உருத்திராக்கமாலை மூலமாகச் செய்யத்தக்க மந்திர ஜபத்தைப் பற்றிக் கிரியாசார முதலிய நூல்களில் விளக்கமாகக் கூறப்பட்டுள் ளது. மாலையைக்கொண்டே எப்பொழுதும் ஜபஞ் செய்வதற்கு இய லாதவர்கள் பலரிருப்பதனால் அவர்கட்கு அங்குலிஜபம் (விரலினாற் செய்வது) செய்யும் முறை தெரிவிக்க வேண்டியது அவசியமாகின்றது. மாலை யில்லாதவர்கள் விரல்களினாலும், அல்லது விரல்களின் இரேகை களினாலும் ஜபிப்பதுண்டு. விரல்களில் ஜபிப்பதும் மாலையினாற் செய் வதற் கொப்பாகும். இரேகைகளினாற் செய்யப் பெறுவது அதனி னும் எண் மடங்கு சிறந்ததென்றும் மிகுந்த பலனைக் கொடுக்குந் தன்மையதென்றும் மந்திர ரகஸ்யமென்னும் நூலில் கூறப் பெற்றுள் ளது. அக்காரணத்தினால் இரேகையாற் செய்யும் ஜபமே சிறந்ததென அங்கீகரித்தல் வேண்டும். ஜபலக்ஷணம் அறிய விரும்புவோர் விரல் களின் பெயரை முதலில் ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். பெரு விரலை அங்குஷ்டம் எனவும், சுட்டுவிரலைத் தர்ஜனி யெனவும், நடு விரலை மத்திமை யெனவும், மோதிர விரலை அநாமிகை யெனவும், சுண்டு விரலைக் கனிஷ்டிகை யெனவும் கூறுவர்.

மத்திமை அநாமிகை இவ்விரண்டு விரல்களின் நடு இரேகைகளை மேருமலையாகக் கற்பித்து அதனைப் பிரதக்ஷணமாக வருவதாகக் கருதி அநாமிகையின் கீழ் இரேகையிலிருந்து ஆரம்பித்து மத்திமையின் கீழ் இரேகையிற் கொண்டுவந்து முடிப்பது ஓர் முறையாம். கனிஷ் டிகையின் அடி ரேகையில் ஆரம்பித்து அநாமிகையின் அடி ரேகை யின்கண் முடிப்பது ஓர் விதம். மத்திமையின் மேல் இரேகையில் ஆரம்பித்து அநாமிகையின் மேல் இரேகையிற் கொண்டு முடிப்பது

மற்றொரு முறை. ஐந்து விரல்களினாலும் ஒருமுறை பிரதக்ஷணமாக வருவதில் பனிரெண்டு வீதம் ஒன்பது முறை செய்வது ஓர் முறை. நான்கு விரல்களில் பத்து ரேகைகளை அங்குஷ்டத்தின் நுனியால் தொட்டு முறையொன்றிற்குப் பத்து வீதம் கணக்கிடுவது ஓர் முறை.

ஜபிக்கும்பொழுது விரல்களை ஒன்றுக் கொன்று சந்தில்லாமல் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். அப்படிச் சேர்க்காவிட்டால் அவ் விரற் சந்தின் வழியாக மந்திர ஜபத்தின் பலன் கழிந்து போய்விடுவதாக ஆகமம் கூறும். இதனால் ஜபஞ் செய்யும்பொழுது யாதொரு ஞாபகமும் செய்கையும் இல்லாது ஒரே மனதாய் ஜபிக்க வேண்டும் என்பது ஏற்படுகின்றதல்லவா? இன்னும் ஜபிக்கும்பொழுது விரல்களை யெல்லாம் சிறிது நிமிர்த்தி வளைத்துக் கொள்ளுதலும் வேண்டும். இங்ஙனம் ஜபிக்கும்பொழுது ஆயிரந்தரமாவது குறைந்தால் நூற்றெட்டு முறையாவது கணக்கிட்டுக்கொண்டு கணக்கில் குறையாமலும் உயராமலும் மூர்த்தித் தியான பூர்வகமாக மந்திரத்தை ஜபிக்கவேண்டும்.

இந்த ஜபம் வாசகம், உபாஞ்சு, மானசம் என மூவகைப்படும். பக்கத்தி லிருப்பவர்கட்கு மாத்திரம் கேட்கும்படி ஜபிப்பது வாசகம். பக்கத்தில் இருப்போர்க்குங் கேளாதபடி உதடசையும்படி உச்சரிப்பது உபாஞ்சு. உதடுகளையும் அசைக்காமல் மனதின்கண்ணேயே ஜபிப்பது மானசம். இவற்றுள், வாசக ஜபத்தினும் உபாஞ்சு சிறந்தது. அதனினும் மானசம் எத்தனையோ மடங்கு சிறந்தது. மந்திர ஜபத்தினால் மூர்த்தித் தியானஞ் செய்து அம்மூர்த்தியின் அருளைப் பெற விரும்புவோர் மேற்கூறிய விதியை அனுட்டித்துத் தவறாது பெறுவார்கள் என வேண்டப் பெறுகின்றது.

(தொடரும்).

சிவானுபவம்.

ஸ்ரீமத் சச்சிதானந்த அன்னதான சுவாமிகள், (ஆம்பூர் மடம்).

(முன் தொடர்ச்சி,)

சிவானுபவங் கைவர வேண்டுமென்று கருதும் உண்மை நேயர்களே! புத்தி விசாரத்தின் வசப்பட்டுப் புண்ணியமற்ற தன்னய வலையிற்பட்டு தருமநெறியிற் செல்லும் அந்தக்கரணத்தை நாசஞ்செய்து கொள்வது அறிவுடைய யாவர்க்கும் உரியதன்று அல்லவா? உண்மையறிவினையுடைய மெய்ஞ்ஞானிகளும் கனவிலுங் காணுதற்கரிய பரப்பிரமத்தைக் காட்டுவதற்கு அந்தக்கரணத்தால் முடியுமேயன்றி புத்தியினுல் ஆகாது. அத்தகைய அபாரசக்தி கேவல அந்தக்கரணத்திற்கு மாத்திரந்தான் உண்டு. இத்தகைய உயரிய தூய்மையான அந்தக்கரணத்தைப் பெறுதற்கு ஓர் பக்குவமுள்ள சற்சீடனுக்கு யுக்தமான வழியில் போதித்தால் அவன் வைராக்கியம் உடையவனுகின்றான். அதனுல் அவனுக்கு உண்மை யறிவு உதிக்கும். சுத்தாந்தக்கரணத்தினுல் அவனுக்கு மெய்ஞ்ஞானம் உண்டாகின்றது. புத்தியினுலோவெனின் பந்தம் அதிகரிக்கின்றது. நாம் நம் உறவினரோடும் நண்பரோடும் அன்பாகப் பேசுகிறோம். அப்பொழுதும் அங்கு புத்தியும் இருக்கிறது. யாரிடத்தில் நமக்கு உண்மையான அன்பிருக்கிறதோ அவர்கள்பால் நமது உள்ளக் கிடக்கையை மறைக்கிறதில்லை. ஆனுல் புத்திதத்துவம் அங்கே தோன்றுமாயின் அது தன் வழக்கத்தினுக்கேற்ப எதிர்ப்பட்டோரது தாரதம்மியங் கருதி நடந்துகொள்ளும்படி நம்மை ஏவுகிறது.

புத்தியின் தொழில் விஷயங்களை விசாரித்தறிதல். அந்தக்கரணமோ அதற்கப்பாற் சென்று ஈசனைத் தெரிசித்தலைத் தொழிலாகவுடையது. புத்தியோ உடனுக்குடன் நமக்குத் தோன்றிக்கொண்டிருக்கும். அந்தக்கரணமோவெனின், அவ்வாறு தன்னை வெளிக்காட்டிக் கொள்ளாமல் மறைந்திருந்தே தன் காரியத்தைச் செய்கிறது. ஏனெனில் புத்தியில் ரஜோகுணம் அதிகப்பட்டிருக்கும். அந்தக்கரணத்தில் சாத்வீகம் அதிகப்பட்டிருப்பதால் அது அந்தரங்க பக்தியை

அதிகப்படுத்துகிறது. அவ்வந்தக்கரணம் மற்றெல்லாக் குணங்களையும் நீக்கித் தானே மனதின்கண் தன்னந்தனியே பொலிந்து விளங்குமானால் ஈசனடியினை எளிதில் கண்டு மகிழலாம். நமக்கு முன்னர் அவதரித்திருந்த மகான்களெல்லாம் எவ்வாறு அரிய பெரிய காரியங்களைச் சாதித்தாரென்றால் அவர்கள் கேவல புத்தியைத் துணைக்கொள்ளாமல் உத்தமமான அந்தக்கரணத்தைத் துணையாகக் கொண்டே அரிய காரியங்களைச் செய்து முடித்தார்களெனத் தெரியவருகின்றது. புத்தியின் மேம்பாட்டினையுடைய ஒருவன் ஓர் கெட்ட காரியத்தைச் செய்யப் பெரும்பாலும் பின்வாங்குகிறதாகக் காணப்படுகின்றிலன். ஆனால் அந்தக்கரணம் உடையவனே பெரும்பாலும் அத்தீங்கைச் செய்ய உடன்படுவதாகக் காண்கிலோம். இனிமேலும் அவ்வாறு நேராதெனவும் உறுதியாய்ச் சொல்லலாம். ஆகையால் நாம் புத்தி தத்துவத்தின் வசத்தில் மிகுதியும் அகப்படாமல் அந்தக்கரணத்தினிடை அழுந்துவோமானால் இறைவனருளை எளிதில் அடையலாம். நம் வாழ்க்கையின் நோக்கத்தைப் புத்தியினால் அல்லாமல் அந்தக்கரணத்தினாலேயே அடைய வேண்டி யிருக்கிறது. இதை நாம் எப்பொழுதும் மனதில் வைத்திருக்க வேண்டியது. இறைவனருளைப் பெறுதற்கு எத்தகைய வயிற்றுக் கல்வியுந் தேவையில்லை. ஈசன் சந்நிதியில் இவைகளுக்கு மதிப்புமில்லை. ஆனால் தூய்மையான மன மொன்றே அவர் வேண்டுவது. எவ்வாறெனில், நாம் பிறனொருவனைக் கொல்ல வேண்டுமாயின் தகுந்த ஆயுதந் தேடவேண்டும்; யாருமற்ற தனியிடம் பார்க்க வேண்டும்; தகுந்த சமயமும் பார்க்க வேண்டும்; அன்றியும், மற்றொரு கொலைஞனுடைய துணையையும் நாடவேண்டி வரும். ஆனால் தானே தற்கொலை செய்துகொள்ள வேண்டினால் இவையனைத்தும் வேண்டுவதில்லை; சிறு ஊசியொன்றே போதுமானது. அதுபோல, உலக விஷயத்தில் ஈடுபட்டவர்கட்குப் புத்தியின் விசாலம் அவசியம் இருந்தே தீரவேண்டியது. ஆனால், உண்மை ஞானத்தால் சிவானுபவத்தைப் பெற விரும்புவோர்க்குப் புத்தியின் துணை வேண்டுவதின்று; தூய்மையான அந்தக்கரணம் ஒன்றே போதுமானது. தூய்மையுற்ற அந்தக்கரணம் உடையவன் ஒருவனுக்கே சீவசிவ ஐக்கிய சமரசஞானம் உண்டாகின்றது. அவன் ஒருவனுக்கே ஈசுவர தரிசனங் கிடைக்கின்றது. தூய்மையான அந்தக்கரணந் தோன்றுவிடின் உலகின்கண் விரிந்து கிடக்கும் அற

நூல்களனைத்தும் நமது நாவில் ததும்பித் தாண்டவமாடினும் நமக்கு உண்மை ஞானம் உண்டாவதரிது. அவ்வறநூல்கள் அனைத்தையும் திரட்டிக்குவித்து அவற்றி னிடையில் நம்மைப் புதைத்துவைப்பினும் நமக்கு அவ்வித ஞானம் உதயமாக எப்பொழுதும் காணமாட்டோம். அந்தக்கரணங் காட்டும் வழியைப் பின் பற்றுவோமாயின் அது உண்மையான ஓரிடத்திற் கொண்டு சேர்ப்பிக்கும். புத்தியினுல் கனவிலுங் காணமுடியாத உன்னத பதவியிற் சேர்ப்பிப்பது அந்தக்கரணம் ஒன்றே. அந்தக்கரணத்திற்கு எது சரியென்று தோன்றுகின்றதோ அது மற்றவருக்குத் தவறென்று தோன்றினும் அதைவிடாது பின் பற்றல் வேண்டும். இவ்வுத்தம வழியிற் செல்லும்போது புத்தி யிடையே வந்து நம்மைத் தடுக்க முயலும். ஆனுல் அதன் வசப் படாமல் அதனை எட்டத் தள்ளிவிட்டு குறித்த வழியிலேயே செல்ல வேண்டும். உலகத்தில் உத்தமமான ஓர் உபகாரத்தைச் செய்ய முற் படுகையில் இதனைச் செய்வோமாயின் குறிப்பிட்ட ஒருவருக்கு மன வருத்தம் உண்டாகும், மற்றொருவருக்கு அதனுல் தீங்கு விளையும். அன்றியும் பிறர் நம்மைக் கண்டு இகழ்வரென்று இவ்வாறெல்லாம் போதித்துத் தடைப்படுத்தப் புத்தி தலைப்படுகின்றது. அப்பொழுது தான் அதற்குச் செவி சாய்க்காது நமது குறிக்கோளை விடாது செய் தல் வேண்டும்.

இங்ஙனம் புத்தியின் வசப்படாமல் மனதில் நிறைந்து கிடக்கும் மாசுகளனைத்தையும் சத்துவகுண விசேஷமாகிய நற்காரியப் பழக்கத் தால் துடைத்துத் தூய்மையானதாகச் செய்வோமாயின் அத்தூய்மை யான மனதின்கண் தான் ஈசனது அருளுருவத்திற் பேரொளிக் கதிர் கள் தடையின்றி விழத் தொடங்கும். இந்தச் சந்தர்ப்பத்தில்தான்,

"புறந்தூய்மை நீரானமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப்படும்" என்னும் அருண் மொழியின் நயம் செவ்வனே விளங்கும். அப்பொழுதுதான் உண்மையான மனக் கண்ணுற்கண்டு தரிசிக்கப் பரமேஸ்வரன் அருளொலி யுருவத்தைக் காட்டிப் பேரானந்தத்தைத் தந்தருளுவன். (தொடரும்).

க. வணிக மல்லையர் புராணம்.

நீர்வளம் நிலவளம் நிறைந்த வடநாட்டிலே சிவபக்தியாகிய செந்நெற்பயிர் தழைந்தோங்கி சிவானந்தமாகிய பெறுதற்கரிய பயனைக் கொடுத்தப் பண்பட்ட விளைநிலமாக விளங்குவது சிவபுரி என்னும் நகர். அந்நகரிலே வைசியர் குலத்திலே வீரசைவர் மரபிலே அம் மரபினர் செய்த தவப்பயனாக மல்லையர் என்னும் பெரியார் ஒருவர் அவதரித்தனர். அவர் தாம் பிறந்த வணிகர் குலத்தை விளக்கமுறச் செய்தமையால் அவர்க்கு வணிக மல்லையர் என்னும் பெயர் வழங்குவ தாயிற்று. அவர், கல்வி, யறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவர்; பரசிவ பக்தியில் மேன்மை யுற்றவர்; அவர் நாள்தோறும் முப்பொழுதினும் நீராடிச் சிவபூசை முடித்து உணவுகொள்ளும் விரதமுடையவர். தாம் இஷ்டலிங்கப்பெருமானை இடைவிடாது உள்ளும் புறமும் அருச்சிக்கும் உண்மையன்பு உடையாராயினும் பலருக்குஞ் சிவபக்தியை யுண்டாக்கும்பொருட்டு நாள்தோறும் காலை மாலை யிரண்டினும் சிவாலயஞ் சென்று சிவதரிசனஞ் செய்துவரும் வழக்கத்தினை மேற்கொண்டிருந்தனர். எங்கேனும் சிவதரிசனத்திற்கு இடையூறு உண்டாயின் உபவாசம் பண்ணும் விரதமுடையவர். அவர் தம் குலதருமமாகிய வாணிபத்தின் பொருட்டுப் பல வூர்களுக்குப் பலருடன் சென்று வருவது உண்டு.

இங்ஙனம் வாழும் நாளில் ஓர் நாள் வணிக மல்லையர் தமது மைத்துன வணிகருடன் வாணிபத்தின் பொருட்டு அயலூருக்குச் சென்றனர். வாணிபமும் செவ்வையாக வருவாயுடன் நடைபெற்றது. அன்று அவ்வூரில் தங்க நேர்ந்தது. மாலையில் நீராடிச் சிவபூசையையும் முடித்துக்கொண்டனர். வழக்கம்போல் சிவாலய தரிசனத்திற்கு மைத்துனருடன் புறப்பட்டனர். அவ்வூரில் சிவாலயமே இல்லை யெனத் தெரிந்து பெருங் கவலையுற்றனர். சிவதரிசனங் கிடைக்காமையாலும், நடு நிசியானமையாலும் வருந்திப் பசியினாலும் துன்புற்றிருந்தனர்.

உடன் சென்ற மைத்துன வணிகரும் தனித்துப் புசித்தற்கு உடன் படாதவராய் அவரினும் மிக வருந்தினர். யாது செய்வார் மைத்துன வணிகர்! அன்பும் அவதியும் அவதிப்படுத்தின. நாழிகை

செல்லச் செல்லப் பசியும் மிக வருத்திற்று. அதனால் மைத்துன வணிகர் ஓர் சூழ்ச்சி செய்யத் துணிந்தனர். சிவபெருமானும் மல்லைய ருடைய சிவதரிசன பக்தியை உலகத்தவர்க்குக் காட்டத் திருவுளங் கொண்டு அவருள்ளத்தில் தக்கதோர் எண்ணத்தைத் தோற்றுவித்த னர். இதனாற்றான் இறைவனின்றாட்ட யாவரும் இயங்குவர் என் கின்றனர் அனுபவமுடைய பெரியார்.

மைத்துன வணிகர் தனித்துச் சென்று ஊருக்குப் புறத்தே செடியடர்ந்த புதரின் நடுவே தாம் அளவு கருவியாக வைத்திருந்த வள்ளத்தைக் கொண்டுபோய்க் கவிழ்த்துச் சிவலிங்கம்போல் அலங்க ரித்து வைத்துத் திரும்பிவந்து அண்ணலே! யான் இவ்வூர்ப் புறத்தே ஓரிடத்தில் ஓர் சிவலிங்கத்தைக்கண்டு வந்தேன். நீர் வந்து தரிசித்து உணவு கொள்ளலாமே யென்று கூறி யழைத்தனர். மல்லையரும் அம் மொழியை உண்மையென நம்பி மைத்துன வணிகர் தீபமெடுத்து வரச் சென்று குறித்த விடத்தில் சிவலிங்கப் பெருமான் கோயில் கொண்டிருத்தலைக் கண்டு பேரானந்த முடையவராய்த் தரிசித்து வழி பட்டு வலம்வந்து முன்னின்று அம்மையப்பரே! அருள் வெள்ளமே! எனதன்பே! அன்பிலூருந் தேனே! உம்மை இன்றெல்லாங் காணப் பெறாது யானும் என்னுடன் வந்தாரும் வருந்த எங்கொளித்தீரோ? எங்கட்கிரங்கி இப்பொழுதாயினும் காட்சியளித்தீரே! எனதன்பையும் விரதத்தையும் பரிசோதிக்க இங்ஙனஞ் செய்தீரோ? என்று பலவாறு புகழ்ந்தேற்றிப் பிரியாவிடை கொண்டு தமதிருப்பிடத்திற்கு வந்து மைத்துனருடன் உணவருந்தினர். இருவரும் மகிழ்ந்திருந்தனர்.

அப்படி மகிழ்ந்திருக்குந் தருணத்தில் அருகிருந்த மைத்துனர் நகைத்து அம்மானே! நாமளக்குங் கருவியாகிய வள்ளமே நீர் தரிசித் துண்ணும்படிச் சிவலிங்கமா யமர்ந்திருந்ததே. அந்த வள்ளத்திற்கு உம்மீதிருக்குங் கருணையே கருணை! இன்று நேர்ந்த அல்லலிருந்து நம்மை நீக்கியது அவ்வள்ள மல்லவா? அதற்கே நாம் நன்றி செலுத் தல் வேண்டும். இன்று செய்த நன்றியே யன்றி தினந்தோறும் நாமளக்குங் கருவியாக நின்று உதவி புரிவதும் அந்த வள்ள மல்லவா? ஆதலால் நீர் விரைந்து சென்று அந்த வள்ளத்தை எடுத்துக்கொண்டு வாரும் என்று பரிகாசம் பண்ணினர்.

அதனைக் கேட்ட மல்லையர் திடுக்கென்று வெகுண்டு சிவபெருமானையும் வள்ளமென்று சொல்லவும் உமக்கு நாவெழுந்ததா? உம்இடத்து நிறைந்திருந்த மூடத்தனம் இப்பொழுதல்லவா வெளியாகின்றது! இப்படிப்பட்ட நாஸ்திகபுத்தி உம்மிடத்து எப்படிப் புகுந்தது? உமது தந்தை முதலிய மரபினரெல்லாம் ஆஸ்திகராயிற்றே? உமது மதியிருந்த வாறென்னே? இதோ வாரும் இறைவனைக் காட்டுகின்றேன் என்றழைத்துச் சென்று புதராலயத்தைக் குறுகினர்.

குறுகினவளவின் முன்னிருந்த செடி கொடிகளெல்லாம் வேலைப்பாடமைந்த சிவாலயமாகக் காணப்பட்டது. அதனருகில் கோபுரங்களும் திருமதில்களும் காணப்பெற்றன. உள்ளே நின்ற வள்ளமே உண்மைச் சிவலிங்கப் பெருமானுயினர். அவரது சந்நிதானத்தில் நந்தி யெம்பெருமானும் பொலிந்து விளங்கினர். அம்பிகை முதலிய பரிவார தேவர்களும் தத்தம் இருப்பிடத்தில் இருந்து காட்சி தந்தனர். தீபங்களும் அகண்டமாய்ப் பிரகாசித்தன. அதனைக் கேள்வியுற்ற அந்நகர வாசிகளும் பிறரும் அங்கு வந்து தரிசித்துப் பேறு பெற்றனர். மல்லையரது உண்மை யன்பும் வைராக்கிய சீலமும் சிவபெருமான் கருணையும் யாவர்க்கும் வெளியாயின. இன்று போலவே என்றும் இருந்தருளுமாறு வேண்டிக்கொள்ள இறைவனும் அவ்வாறே அருள் புரிந்தனர்.

வள்ளமே சிவலிங்கமான காரணத்தால் இவ்வுலகத்தோர் இன்றும் அப்பெருமானை வ ள் ள லே ச் சு வ ர ர் என்று சொல்லுகின்றனர். இதனால் வைராக்கியமாகிய விரதமே எண்ணிய பலனைத் தருமென்பது விளங்குகின்றது.

(தொடரும்).

சிகாதாரண விவகாரம்.

இலிங்க தாரணம், விபூதி தாரணம், உருத்திராக்க தாரணம் என்றாற்போல, சிகாதாரணம் என்பது—சிகையை உத்தமாங்கமாகிய தலையின்கண் தரித்துக் கொள்ளுதல் என்பது பொருள். சிகை—மயிர்முடி. பஞ்சாசாரியப்பிரபா முதலிய வடநாட்டுப் பத்திரிகையை நோக்குங்கால் சிகாதாரணம் வீரசைவர்கட்கு அவசியமாக வேண்டற்பாலதா? அல்லது விடுக்கற்பாலதா? என்னும் விவகாரமும் வடநாட்டின்கண் வீரசைவ சமூகத்திலிருப்பதாக அறிகின்றோம். சிகையை எடுத்துவிட்டுத் தமது கருத்திற் கிணங்கியவாறு புதிய முறையில் வைத்துக்கொள்ள விரும்பிய நவீனர்களாலேயோ அல்லது அவரைக் குறைகூற வந்த பழமையோராலேயோ இவ்விவாதம் நேர்ந்திருத்தல் வேண்டும். பாரதநாட்டிற் பிறந்த இந்துக்களெனப் பெறும் வைதீகர்கள் அனைவரும் தலையில் சிகையை வைத்துக் கொள்ளல் இலேசான வழக்கத்தில் இருந்துவந்தது; வருகின்றது. தமிழ் நாட்டிலோ எந்த மரபினருள்ளும் சில வருடங்கள் முன்வரைச் சிகையின்றி முண்டித சிரமுள்ளவர்களாய் இருப்போரைப் பார்த்தலரிது. சிகையில்லாது இருப்போரைக் காணில் தீயசகுனம் என்பாருமுளர். வழக்கத்தில் சிகையில்லாது இருப்போராகிய சிலரும் தங்கள் இல்லத்தில் சுபக் கிரியைகள் நடக்குங்கால் தலையில் பாகை கட்டிக்கொள்ளுதல் என்ற சாம்பிரதாயமும் இருந்துவருகின்றது. இவை நிற்க, சாஸ்திர ஆதாரங்களைப்பற்றி விசாரிப்போம்.

> "முகே மந்த்ரோ ஹ்ருதித் தியானம் மஸ்தகே லிங்கதாரணம்,
> சிகா ருத்திராக்ஷ பஸ்மானி இதிப்ராஹ்மண லக்ஷணம்."

முகத்தில் பஞ்சாக்கர மந்திரத்தை உச்சரிப்பது போலவும், இதயத்தில் பரசிவ மூர்த்தியைத் தியானிப்பது போலவும், உத்தமாங்கத்தில் (தலையில்) இஷ்டலிங்கத்தைத் தரிப்பது போலவும், சிரசினிடத்தில் சிகையை எவர் தரித்திருக்கின்றனரோ அவரே வீரசைவப் பிராமணரென்று எடுத்துரைக்கும் கௌதம ஸ்மிருதியின் வாக்கியத்தை இலிங்க தாரண சந்திரிகை யாசிரியர் தமது கிரந்தத்தில் மேற்கோளாக

எடுத்துக் கொண்டுள்ளார். இந்தச் சுலோகத்தில் "மஸ்தகே லிங்க தாரணம்" என்ற ஓர் வாக்கியம் இருத்தலினால், இந்த கௌதம வாக்கியம் இலிங்க தாரணியாகிய பிராமணனைக் குறித்துக் கூறிய வாக்கியமாகின்றதே யன்றி இலிங்க தாரணம் இல்லாத பிராமணனைக் கருதியுரைத்த வாக்கியம் அல்லவென்று தெளிவாக விளங்குவதால், பரம்பரையாக வீரசைவர்கட்கே இஷ்டலிங்கம், மந்திரம், பஸ்மம், உருத்திராக்கம் முதலியவைகள் எப்படி முக்கியக் குறிகளாக இருக்கின்றனவோ அவ்வாறே இவைகளின் தொகையில் சிகாதாரணமும் ஓர் முக்கியமாகக் குறியாகின்றது. இதன்றியும் வைதீகராகிய பிரம்மச்சாரிகளும், கிருகஸ்தரும் சிகையில்லாது இருப்பரேல் அவரால் செய்யப்படும் சிவலிங்க தாரணமும், குருபூசையும், ஏனைய வைதீக கருமங்களும் பயன் தருவனவல்ல. சிகை யில்லாது இருத்தல் அவைதீகருடைய அடையாளமாகின்றது. சிகாதாரணம் உடையவன் எந்த மங்கள காரியத்தையும் செய்தற்கு உரியவன். சிகாதாரணம் இல்லாதவனுடைய முகதரிசனமும் செய்யலாகாதென சாஸ்திர வாக்கியம் முறையிடுகின்றது. ஆனால் அவரவரது நிலைக்குத் தக்கவாறு சிகையில்லாது இருப்பது சர்வசங்க பரித்தியாகஞ் செய்த சன்னியாசியின் தருமமேயன்றிப் பிரம்மச்சாரி, கிருகஸ்தர்களின் தருமமன்று.

பிரம்மசசரிய முதல் சன்னியாசி முடிவாகிய நான்கு ஆச்சிரமங்களையுங் கடந்து அதிவருணாச்சிரமம் எனக் கருதும் இலிங்கதாரியும் "ப்ரவ்ரசேத் க்ரஹ முத்ஸ்ருச்யசிக் முண்டியபிவா ஜடே" என்றபடி கிராமத்தில் ஓரிரவு வசித்தும், நகரத்தில் ஐந்திரவு வசித்தும், கைப்பிச்சை யேற்றும், தனித்த இடத்தில் வசித்தும், தனது பூருவ ஜாதி குலம் ஆச்சிரமங்களை விடுத்தும் சிவாச்சிரமத்தை யுடையவனாகிப் பிச்சை யெடுத்தே தனது வாழ்க்கையை நடத்திக்கொண்டு தத்துவ விசாரணையிலேயே கருத்தா யிருக்கும் நிராபாரி யென்பவனுக்கும், சிகாதாரணம் இல்லாதிருப்பினும் இருக்கலாம், சிகாதாரணம் வைத்திருப்பினும் இருக்கலாம், ஜடாதாரியாக இருப்பினும் இருக்கலாம் என்று பாரமேஸ்வராகமத்தில் வாக்கியங்கள் இருத்தலினால் சிகாதாரணம் அதிவருணாச்சிரமிக்கும் தோஷமுடையது அன்றென்று இதனால் உறுதியாகின்றபடியால், வருணாச்சிரம வரைக்குட்பட்ட பிரம்மச்சாரி முதலியவர்கட்குச் சிகாதாரணம் வேண்டுமென்பது கைமுதிக நியாயத்தினால் நிச்சயிக்கப்படுகின்றது.

மேற்குறித்த பாரமேஸ்வர ஆகமத்தில்:—"ப்ராஹ்மண வீர சைவஸதா: சிகா யஜ்ஞோபவீ தின:" என்று கூறி யிருத்தலினுல் அவைதீகருக்குச் சிகாதாரணம் இல்லாது இருப்பினும், வைதிகராகிய வீரசைவர்களுக்கு மாத்திரம் சிகாதாரண மின்மை கொள்ளத் தக்க தன்று. ஆதலினுல் வைதீகர்களாகிய வீரசைவர்களும் பிறரும் சிகா தாரண பக்ஷத்தை அங்கீகரித்துக் கொண்டு அதை மறுப்பவருடைய பக்ஷத்தை அகற்றுதல் வேண்டும்.

இப்பக்கத்திலும் வீரசைவர்களிற் சிலர், இளமையிற் செய்யப் பெறும் விதி முறையான சௌள கருமத்தை விடுத்து இடைப்பட்ட காலத்தும், கலியாணமான பின்னும் பிரார்த்தனை செய்துகொண்ட தாகக் கருதிக் கடவுளைத் திருப்தி செய்வதாகக் கூறி விரும்பிய ஆலயங் கட்குச் சென்று தலையை மொட்டை யடித்துக்கொண்டு அமங்கல ரூபமாக வருகின்றனர். என்னே இவர்கள் அறியாமை! விதிமுறை யும் கடவுள் ஆணையால் விதிக்கப்பட்டது அல்லவா? அவ்விதியைக் கடந்து இல்லறத்தார்களுக்கு அடாத மொட்டை யடித்தலை, மங்கள முடையவராகிய ஆண்மக்களும், பெண்மக்களும் நினைத்தபொழுதெல் லாம் செய்துகொண்டு ஆண்டவனுடைய சந்நிதானத்தில் நிற்பரேல் இந்த அமங்கலையாகக் காணப்படும் மொட்டைத் தலையரைக் காண அக்கடவுளும் கண்கூச மாட்டாரோ? அன்றியும், சிகாதாரணமுடை யவராகக் கண்ட நாயகன் நாயகியர் இருவரும் ஆலயத்திற்குச் சென்று திரும்புகையில் மொட்டை யடித்துக்கொண்டு அமங்கலைகளாக வரு தலைக் காண எவ்வளவு அருவருப்பையும் அழகின்மையையும் உண் டாக்குகின்றது.

இதுவரையும் கூறியவாற்றுல், வீரசைவர்கள் குழந்தைகளுக்கு இளமைப் பருவத்திற் செய்யவேண்டிய சௌள கருமத்தைத் தவிர ஏனைய தீக்ஷை, கலியாணமான பின்னர் இடைப்பட்ட காலங்களில் எந்தக் காரணத்தை முன்னிட்டாவது சிகையை எடுத்துக் கொள்ளல் கூடாத காரியமெனவும், சிகையைத் தமக்குத் தோன்றியவாறு விகார வடிவாக வைத்துக் கொள்ளுதல் அடாத செயலெனவும் உணர்ந்து கொண்டு என்றும் விதிப்படிச் சிகாதாரணம் உடையவர்களாக இருக்க வேண்டுவதே வீரசைவ தருமமென்று யாவரும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

கொலைமறுத்தல்.

திருப்பேரூர் ஸ்ரீமத் சாந்தலிங்க சுவாமிகள்.

(முன் தொடர்ச்சி).

முன் கட்டுரையில், வீரசைவ சமயாசாரியராம் பெரியார் ஒருவரைப் பக்குவமுடைய உலோகயத மாணவன் அணுகி, "உயிர்த்தோற்றத்தில் உயர்வு தாழ்வு எங்ஙனம் உண்டாகியது" என வினவினனாக, சுவாமிகள், "பல்லுயிருள்ளும் மக்கட் பிறப்பே உயர்ந்த தெனவும், அதனுள்ளும் உயிர்க்கொலை புரியாதோரே உயர்ந்தோராவர்" எனவும் கூற, ஷை உலோகாயதன், "உயிர்க் கொலையால் வரும் தாழ்வு எங்ஙனம்?" எனச் சுவாமிகள் கூறுகின்றார்.

மாணவ! கொலையானது ஒருவன் செய்யும் தீவினையாகிய ஓர் உருவிற்குத் தலையெனப்படும்; எங்ஙனமெனின், உயிர்கட்கு இதஞ் செய்தலே புண்ணியம் எனவும், அகிதஞ் செய்தலே பாவம் எனவும் அறநூல்கள் முழுமையும் முழங்குகின்றன; கொலைக்கு மேற்பட்ட பாவமும், கொல்லாமைக்கு மேற்பட்ட புண்ணியமும் இல்லை. ஆதவின் கொலையே பாவத்துக் கெல்லாம் முதன்மை எனப்படும்.

உலோ.—சுவாமி! கொலைக்கு மேற்பட்ட பாவமில்லை என்று சொன்னீர்கள்! அப்பாவம் மக்களை என்ன செய்யும்?

சுவாமி.—அப்பா! "கொலைப் பாவமானது என்றுந் தொலையாத நெடுநாள் அனுபவிக்கத் தகுந்த பெருந் துன்பத்தைத் தரும்" என்பதை உறுதியாய் உணர்வாயாக!

உலோ.—வீரசைவ சமயாசாரிய சுவாமிகாள்! தாங்கள் கூறுவது ஆச்சரியமாய் இருக்கின்றது. அங்ஙனம் கொலை செய்த ஒருவன் அக்கொலையால் வருந் துன்பத்தை யனுபவிக்கக் கண்கூடாகக் கண்டிலமே! தாங்கள் கூறுவதை எங்ஙனம் நம்புவது.

சுவாமி.—அப்பா! நிலத்தை உழுது பயிர்செய்யும் ஒருவனுக்கு, அந்நிலத்தில் வரும் தானியம், காலக்கிரமத்தில் உணவிற்கும், மேலைக்கு ஷை நிலத்தைப் பயிர்செய்ய வித்தும் ஆனாற்போல, கொலைசெய்தோன், அக்கொலையால்வரும் பாவத்தின் பயனை இம்மையில் அனுபவிக்காது விடினும் ஆயுள் முடிவில் நரகம்சென்று பெருந்துன்பத்தை யடைவதோடு

நில்லாமல் மீண்டும் யோனி வாய்ப்பட்டுப் பிறந்துழன்று டி பாவத்தின் பலனை யனுபவிப்பான் என்பது நிச்சயம் எனக் கொள்ளக் கடவாய்.

உலோ.—உத்தம குருவே! கொலை செய்தவன் இம்மையில் அன்றி மறுமையிலும் துன்ப மனுபவிப்பான் என்று துணிந்து கூறுவது எங்ஙனம்?

சுவாமி.—அப்பா! விஷத்தையுண்ட ஒருவனுக்கு உயிர்க்கு இறுதி வருதலின் முன்பே, உண்டவுடன் வெப்பந் தோன்றுதல் போலவும், நெருப்பாற் சுடுண்ட ஒருவனுக்குப் புண்ணு வதன் முன்பே எரிச்சல் உண்டாவது போலவும், கொலை பாதகம் செய்த ஒருவன் மறுமையில் நரகவேதனை யடை தல் முன்பே சித்தப் பிரமையாதி துன்பங்களை யடை கிறான். ஆதலால் பின்வரும் இறப்புக்கும், புண்ணிற்கும் காரணமாக, முன்னால் வெப்பமும், எரிச்சலும் வந்து வருத்தியதுபோல மறுமையில் வரும் நரக வேதனைக்குக் காரணமாக, இம்மையிலும் கொலைப் பாவப் பலனாகிய துன்பத்தை யனுபவிப்பான் என்பதை அறிவாயாக.

உலோ.—சுவாமி! தாங்கள் சொல்வது பொருந்தாது. எங்ஙனம் எனின், இம்மையில் இறந்துபோன அவனைத் தகனம்செய் வது உண்மையாகலின், அவன் முடிவில் நரக வேதனை யடைவான் என்பது எப்படி?

சுவாமி.—உலோகாயத! உயிரைக் கொண்டேகும் யம தூதர்கள், புண்ணிய பாவ பலன்களை யனுபவித்தற்கு அவன் புண் ணியம் உடையவனாய் இருந்தால் தேவ சரீரத்தையும், பாவம் உடையவனாய் இருந்தால் யாதனா சரீரத்தையும் ஒரு கணப்பொழுதில் உண்டுபண்ணி விடுவார்கள் என் பதைத் தெரிந்துகொள்.

உலோ.—சுவாமி! இந்தச் சரீரம் செய்த பாவத்திற்கு அந்தச் சரீரத் தைத் தண்டிப்பதானது "குற்றஞ் செய்தவன் தப்பிப் போக குறுக்கேவந்தவனைத் தண்டிப்பது போலவும், ஒரு வன் பசிக்கு மற்றொருவன் உண்பது போலவும்" இருக் கின்றது. இது நகைப்புக்கிடமான நியாயமாகுமேயன்றி உலகத்தார் ஒப்புக்கொள்வதன்று. அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்.

சுவாமி.—அப்பா! இந்தச் சரீரத்தினின்றும் புண்ணிய பாவங்களைப் பண்ணினவனுடைய அறிவு அந்தச் சரீரத்திலுஞ்சென்று புகும்; ஆதலால் அதற்கும் இதற்கும் சம்பந்தம் உண் டென்பது விளங்கவில்லையா? (தொடரும்.)

வடநாட்டு நிகழ்ச்சிகள்.

பம்பாய் மாகாணச் சட்டசபையும் மந்திரி பதவியும்.

மகா-௱-௱-ஸ்ரீ இராவ்பகதூர்,

சீத்தப்பாதோடதப்பாகம்பளி B. A., B. L., அவர்கள்.

சமயாபிமான சீலர்களே! நமது வீரசைவ சமாஜத்தாருள் மிகப் பெரியாராகிய கம்பளியவர்கள் சென்ற மாதத்தில் நடந்த பம்பாய் மாகாணச் சட்டசபையின்கண் முதல் மந்திரியாகத் தேர்ந் தெடுக்கப்பெற்று நியமனமாயிருக்கும் பெருமையையும், மகிழ்ச்சியை யும் இவ் 'வீரசைவம்' எங்ஙனந் தனது நேயர்களுக்குத் தெரிவித்து மகிழ்ச்சியை யூட்டாதிருக்கக்கூடும்? இப்பெரியார் பம்பாய் மாகா ணத்தைச் சார்ந்த ஹூப்ளி என்னும் நகரத்தில் 2000 வீரசைவர்கள் நிறைந்த சமூகத்தில் செல்வத்தினும் சிறப்பினும் உயர்ந்த குடும்பத் தில் பிறந்தவர். சுய பாஷையிலும் ஆங்கில மொழியிலும் நன்கு கற்றுத் தேர்ந்தவர். சிறந்த சமயாபிமானமுடையவர். சமாஜ சேவை யில் மிக விருப்பமுடையவர். இரண்டு முறையாகச் சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்றுக் கடந்த ஆண்டுகளில் அம்மாகாணச்சட்ட சபையில் டிப்டி பிரசிடெண்டாகவு மிருந்து வந்தனர். இப்பொழுது லண்டன் நகரின்கண் நடந்துகொண்டிருக்கும் வட்டமேஜை மகா நாட்டிற்கு அரசாங்கத்தாரால் ஓர் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றும் இன்னாட்டில் நடைபெறவேண்டிய முக்கியமான செயலைக் கருதி அங்கு ஏகாது நின்றனர். மூன்றாண்டுகட்கு முன்னர் பெங்க ளூரின்கண் நடைபெற்ற, அகிலபாரத வீரசைவ மகாசபையின் 10-வது மகாநாட்டின்கண் தலைமை வகித்துச் சிறப்புற நடத்தினர். அந் நாட்டில் பிரபல வழக்கறிஞராயுமிருந்து வருகின்றனர். இவர் இப் பொழுது பம்பாய் மாகாணத்தில் மந்திரி பதவியைப் பெற்று விளங்கு வது நமது வீரசைவ சமூகத்திற்கே பெருஞ் சிறப்பைத் தருகின்றது. வீரசைவர்களுக்குள், திவான் பகதூர் ஸர். கெ. பி. புட்டண்ண செட்டியார் அவர்கள் மைசூர்சமஸ்தானத்தில் உயர்ந்தபதவியிலிருந்து இப்பொழுதும் கௌரவ சீலராக விளங்குகின்றனர். கனம் மகா தேவையா அவர்கள் இப்பொழுது ஐகோர்ட்டு ஜட்ஜீயாகிய உயர்ந்த பதவியிலிருக்கின்றனர். அன்னவருடன் கம்பளியவர்களும் மூவராக மந்திரி பதவியைப் பெற்று வீரசைவ சமூகத்திற்குப் பெருஞ் சிறப் பைத் தந்து நிலவுகின்றனர். இவர்கள் நீண்டாயுளைப் பெற்றுப் பெருஞ் சிறப்புடன் சமய சேவை செய்யுமாறு திருவருள் முன்னின் றருள்க!

ஓர் சமய சேவகன்.

திரு. ஆசிரியர் அ. வரதநஞ்சைய பிள்ளையவர்களுக்கு

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்து 19-ம் ஆண்டு விழாவில்,

இலத்திவாடி மிட்டா சமீன்தார்

திரு. R. சின்னசாமி ரெட்டியார் அவர்கள் பொற்பதக்கப் பரிசில்

வழங்கியபோது, ஷெயார் சகோதரர்

திரு. அ. கந்தசாமிப் பிள்ளையவர்கள் பாடியன.

வான்காக்கும் படிகாக்கும் வளவியசெங் கோற்காக்கும் வன்மை மேவிக், கான்காக்குங் கொடைக்கரத்தாய் கலங்காக்குஞ் சாமனைய கழற்கால் வேந்தே!, மான்காக்குங் கரதலத்தார் மகற்காக்குந் திருமனத்தாய் வயவ ரேறே!, தேன்காக்குந் தமிழ்ச்சுவைதேர் சின்னசா மிப்பெயர்கொள் சீரி யோனே! 1

எம்முனம தியலாசான் முத்தமிழ்தேர் கலைக்குரிசில் இன்சொ லன்றி, வெம்மைமொழி வோருக்கும் பிறிதுரையாப் பெருங்குணத்தான் வேள்சீர் போற்றும், செம்மனத்தான் வரதநஞ்சத் தேசிகனுக் காசானும் சிறப்பு நல்கும், தம்மைநிகர் வோர்சேர்சீர்க் கரந்தையம்பே ரவையின்மடல் தந்தாய் அன்றே. 2

கடலளிக்கும் புவியளித்த கழல்வேந்தர் தமிழின்வளங் கருதிமுன்னாள், உடலளிக்கும் உயிரெனவே யுணர்ந்துபுரந் தமைநூலால் உணர்ந்தி ருந்தேம், அடலளிக்கும் புயமுடையான் சின்னசா மிக்குரிசில் ஆசாற் கிந்நாள், மடலளித்தல் முதற்செயலால் கண்கூடாக் கண்டறிந்து மகிழ் கின் றோமே. 3

தற்காலம் பலசெல்வர் தமிழ்பேணார் தம்பொருளைக்
கற்கால மனிதரெனக் கண்மூடிக் கழித்தொழிப்பார்
சொற்காலு மமிழ்தனைய சின்னசா மித்துரையே
நிற்காணப் பெறினன்னார் நெறிகாணுந் திருவினரே. 4

வாயின் மீச்செலக் குனிந்தவன்,* அருந்திய எச்சில்
வாயி னீர்கொடு கழுவிட முனிந்தவன்,† மகிழும்
வாயி லோவடி வருடலென் றிரங்கியோன்‡ மான
வாயி லனின செயலினங் குரவனும் அம்மா. 5

---

* மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்,

† வீரபத்திரக்கவிராயர், ‡ அமிர்த கவிராயர்.